## S.S.L.C. GOVT. PUBLIC EXAMINATION - MARCH/2019
## SCIENCE - KEY ANSWER

| Q.No. | Answer | Marks |
|---|---|---|
| | பிரிவு - I<br>(மதிப்பெண்கள்:15) | |
| 1 | மரபணு மாற்றம் செய்யப்பட்ட விந்தணு | 1 |
| 2 | அல்சிமர் நோய் | 1 |
| 3 | கலப்பு நரம்புகள் | 1 |
| 4 | விதை | 1 |
| 5 | கோரைப் பற்கள் | 1 |
| 6 | பசுங்கணிகம் | 1 |
| 7 | பெட்ரோலியம் | 1 |
| 8 | கூழ்மக் கரைசல் | 1 |
| 9 | வெள்ளை | 1 |
| 10 | தேனிரும்பு | 1 |
| 11 | c=O | 1 |
| 12 | 36.25X24X60X60X3X$10^8$ மீ | 1 |
| 13 | 6.673X$10^{11}$N$m^2$k$g^{-2}$ | 1 |
| 14 | 20J | 1 |
| 15 | திசைமாற்றி | 1 |
| | பிரிவு - II<br>(மதிப்பெண்கள்: 40) | |
| 16 | உடல மூலச் செல்கள் பொதுவாக<br>எலும்பு மஜ்ஜை, கருச்செல், பனிக்குடத் திரவம் மற்றும் தொப்புள்கொடி போன்றவற்றிலிருந்து பெறப்படுகிறது. | 4X1/2<br>=2 |
| 17 | i) டாலி (குளோனிங் ஆட்டுக்குட்டி)<br>ii) எட்வர்டு ஜென்னர் | 1<br>1 |
| 18 | i) ஹெபடைடிஸ் B வைரசுக்கு எதிராக(HBV)<br>ii) வைட்டமின் $B_{12}$ | 1<br>1 |
| 19 | ➢ கடும் காய்ச்சல் மற்றும் உடல் குளிர்ந்து நடுக்கம்,<br>➢ விட்டுவிட்டுக் காய்ச்சல்<br>➢ அடிக்கடி பாதிக்கப்பட்டால் மண்ணீரல் பழுதடைதலும் கல்லீரல் திசு அழிதலும் ஏற்படும். | 2 |
| 20 | ➢ நடுமூளையின் முதுகுப்பக்கத்தில் காணப்படும் நான்கு அரைவட்ட கோளங்கள் போன்ற பகுதி கார்போரா குவாட்ரிஜெமினா எனப்படும்.<br>➢ இது பார்த்தலின் அனிச்சைச் செயலையும், பார்வையின் சார்பு இயக்கங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் போன்ற செயல்களைச் செய்கிறது. | 1<br>1 |
| 21 | அல்லி இதழ், புல்லி இதழ், சூல்முடி, சூல்தண்டு, சூற்பை, மகரந்தப் பை, | 4X1/2 |

| | | |
|---|---|---|
| | மகரந்தக் கம்பி (ஏதேனும் நான்கு பாகங்கள்) | =2 |
| 22 | அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி. (R) ஆனது (A) –ஐ விளக்குகிறது. | 2 |
| 23 | படம்<br>பாகங்கள்: (ஏதேனும் நான்கு பாகங்கள் | 1<br>1 |
| 24 | ➢ தோல் மிகவும் தடினமானது.<br>➢ நீரை ஈர்த்து வைத்துக் கொள்ளும் ஆஸ்மாட்டிக் செல்களைக் கொண்டது.<br>➢ அடர்த்தியான கண் புருவங்கள் மற்றும்<br>➢ மணல் புகாத நாசித்துளைகள் | 4X1/2<br>=2 |
| 25 | ➢ பலசெல் உயரினங்களில் உடலமைப்பு பெரியதாக உள்ளதால் ஊடுருவல் முறை மிகவும் மெதுவாக நடைபெறும்.<br>➢ ஆக்ஸிஜன், உணவுக்கழிவுகள் அகற்றும் முறை அவற்றின் உடலமைப்பிற்கு சற்றும் பொருந்தாததாக அமையும்.<br>➢ உடலினுள் காணப்படும் நெருக்கமான செல்களுக்குள் ஊடுறு வும் ஆக்ஸிஜன் மையப்பகுதியில் உள்ள செல்களுக்கு கிடைப்பது கடினம்.<br>➢ எனவே பலசெல் உயிரினங்களில் சுற்றோட்ட மண்டலத்திற்கு ஊடுருவல் முறை பொருந்தாது. | 2 |
| 26 | ➢ இறந்துபோன தாவர விலங்குகளில் உடல்களில் உள்ள கரிமப் பொருள்களிலிருந்து உணவைப் பெரும் உயிரினங்கள் மட்குண்ணகள் ஆகும்.<br>➢ பல பூஞ்சைகளும் பாக்டீரியங்களும் மட்குண்ணிகளாக உள்ளன.<br>➢ ஆஞ்சியோஸ்பெர்ம்களில் மனோட்ரோபா பச்சையம் அற்று காணப்படுவதால் மட்குண்ணியா உள்ளது. | 2 |
| 27 | தற்சார்பு ஊட்ட முறை / பச்சையம் / ஹைபிஸ்கஸ்<br>ஒட்டுண்ணிகள் / ஹாஸ்டோரியங்கள் / கஸ்க்யூட்டா<br>மட்குண்ணிகள் / மைக்கோரைசா வேர்கள் / மோனோட்ரோப்பா | 2 |
| 28 | மல்பெரி→கம்பளிப்பூச்சி→குருவி→ பருந்து<br><br>பருந்து<br>குருவி<br>கம்பளிப்பூச்சி<br>மல்பெரி | 1<br>1 |
| 29 | ➢ இதனை ஏராளமான அளவிற்கு தொழில்நுட்பத்துடன் உருவாக்கலாம்.<br>➢ அனைத்து ஆற்றல் தேவைகளையும் பெட்ரோலியத்தைக் காட்டிலும் குறைந்த பொருள் செலவிலும் குறைந்த மாசுபடுத்தும் அளவிலும் நிறைவேற்றுகிறது.<br>➢ நச்சுத்தன்மை அற்றது, கையாளுவதற்கும் வழங்குவதற்கும் பாதுகாப்பானது.<br>➢ அதிக நிறை ஆற்றல் கொண்டது. | 4X1/2<br>=2 |

Question 27 table:

| தற்சார்பு ஊட்ட முறை | பச்சையம் | ஹைபிஸ்கஸ் |
|---|---|---|
| ஒட்டுண்ணிகள் | ஹாஸ்டோரியங்கள் | கஸ்க்யூட்டா |
| மட்குண்ணிகள் | மைக்கோரைசா வேர்கள் | மோனோட்ரோப்பா |

| | | |
|---|---|---|
| | ➢ பெட்ரோலியப் பொருட்களின் எரிதல் வெப்பத்தைக் காட்டிலும் 2.5 மடங்கு அதிகம் மற்றும்<br>➢ எத்தனாலைவிட 4.5 மடங்கும், மெத்தனாலைவிட 6 மடங்கும் அதிகம் கொண்டது. | |
| 30 | ➢ இக்கூற்று தவறானது.<br>➢ திரும்பப் பெற இயலும் இயற்கை வளம் என்பது ஓர் இயற்கை வளம். இதனை மனித நுகர்வின் வேகத்தைவிட மிக வேகமாக இயற்கை நிகழ்வினால் மீண்டும் உருவாக்கலாம். **(அல்லது)**<br>➢ திரும்பப் பெற இயலாத இயற்கை வளம் என்பது ஓர் இயற்கை வளம். இதனை மனித நுகர்வின் வேகத்தைவிட மிக வேகமாக இயற்கை நிகழ்வினால் மீண்டும் உருவாக்க இயலாது. | 2 |
| 31 | ➢ வீட்டுத்தோட்டம், வீட்டின் புறத்தே உள்ள தாவரங்களுக்குப் பாய்ச்ச பயன்படுத்தலாம்.<br>➢ கழிவுகளை வடிகட்டிப் பயன்படுத்தலாம்.<br>➢ விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம். | 2 |
| 32 | ➢ தொடர்ந்து ஒழுங்கில்லா நிலையில் இயங்கும் கூழ்மத்துகள்களின் இயக்கமே பிரௌனியன் இயக்கம் எனப்படும்.<br>➢ இந்நிகழ்வை இராபர்ட் பிரௌன் என்ற அறிவியல் அறிஞர் கண்டுபிடித்தார். | 2 |
| 33 | கரைபொருள் — கரைப்பான் — எடுத்துக்காட்டு<br>திண்மம் — **வாயு** — புகை<br>**வாயு** — திண்மம் — தக்கை | 1<br>1 |
| 34 | தவறான கூற்று: திருத்தம்<br>i) 2X ஆவி அடர்த்தி = ஒப்பு மூலக்கூறு நிறை<br>ii) S.T.P -ல் ஒரு வாயுவின் மோலார் பருமன் 22.4 லி | 1<br>1 |
| 35 | pH = 14 – pOH<br>pOH = $-\log 1\times10^{-8}$<br>= 8<br>pH = 14 – 8<br>= 6 | 1<br>1 |
| 36 | ➢ $ZnSO_4 + Cu \rightarrow CuSO_4 + Zn$ இந்த வினை நடைபெறாது.<br>➢ ஏனெனில் தாமிரம் துத்தநாகத்தைவிட வினைத்திறன் குறைந்தது.<br>➢ எனவே அதனை இடப்பெயர்ச்சி செய்ய இயலாது. | 1<br>1 |
| 37 | அலுமினியத்தின் உலோகக் கலவைகள் இலேசானவை, உறுதியானவை மற்றும் அரிப்பை எதிர்ப்பவை. | 2 |
| 38 |  | 1<br>1 |
| 39 | ஆம், உறுதிப்படுத்துதலை விளக்கும் வகையில் காரணம் உள்ளது.<br>சகப்பிணைப்பானது எலக்ட்ரான்கள் பங்கிடப்படுவதால் உருவாகிறது. | 2 |

| | | |
|---|---|---|
| 40 | BARC, WHO,ONGC | 2 |
| 41 | ➢ அதிக சுமையுடன் இயங்கும் வாகனத்தை நிறுத்த அதிக விசை தேவைப்படுகிறது.<br>➢ ஒரு பொருளின் நிறை மற்றும் திசைவேகத்தின் பெருக்கற்பலன் அதன் உந்தம் ஆகும்.<br>➢ அதிக நிறைகொண்ட பொருள் அதிக உந்தத்தைப் பெற்றிருக்கும். | 2 |
| 42 | P = VXI<br>= 240X0.65 = 156 வாட் | 1<br>1 |
| 43 | ➢ ஒரு தனித்த காற்றாலையின் வெளியீட்டு ஆற்றல் மிகவும் குறைவு வணிக நோக்கில் பயன்படுத்த காற்றாலைப் பண்ணை அமைக்கவேண்டும்.<br>➢ விசையாழிக்குத் தேவையான வேகத்தை நிலைநிறுத்த காற்றின்வேகம் 20.கி.மீக் குக் குறையாமல் இருக்கவேண்டும். | 2 |
| 44 | $R_S = R_{P1} + R_{s1} + R_{p2}$<br>= 0.6+2+0.6 = 3.32 ஓம் | 2 |
| 45 | ➢ குவியதொலைவின் தலைகீழி லென்சின் திறன் என வரையறுக்கப்படும்.<br>➢ லென்சின் திறனின் அலகு டயாப்டர் | 1<br>1 |
| 46 | AC மின்னியற்றியில் உள்ள நழுவு வளையங்களுக்குப் பதிலாக பிளவுபட்ட வளையத் திசைமாற்றியைப் பயன்படுத்தி DC மின்னியற்றியாக மாற்றலாம். | 2 |
| 47 | கூற்று A சரி காரணம் R தவறு. | 2 |
| | **பிரிவு - III**<br>**(மதிப்பெண்கள் : 20)** | |
| | பகுதி - I | |
| 48 | **நோய்க்காரணி**: சல்மோனெல்லா டைபி<br>**பரவுதல்**: மாசடைந்த நீர் மற்றும் மாசடைந்த உணவுப்பொருட்கள்.<br>**நோய்பரப்பி**: நோயுற்றவர் ஒரு தாங்கியாக செயல்பட்டு பரப்புதல்.<br>**அறிகுறி**: தொடர்ச்சியான காய்ச்சல், குடற்பகுதியில் புண்களும் வீக்கமும். அடிவயிற்றில் சிவப்பு புள்ளிகள் தோன்றுதல்.<br>**தவிர்க்கும் முறைகள்**: நோயாளியைத் தனிமைப்படுத்துதல், சுகாதாரமான உணவுப்பழக்கம், சுகாதாரமான கழிவறைப் பயன்பாடு மற்றும் ஈக்களிலிருந்து பாதுகாப்பு | 1<br>1<br>1<br>2 |
| 49 | **புற அமைவு நரம்பு மண்டலம்**:<br>➢ மூளை மற்றும் தண்டுவடத்திலிருந்து உருவாகும் நரம்புகள் புற அமைவு நரம்பு மண்டலமாகும்.<br>➢ இவை, மூளை அல்லது கபால நரம்புகள் மற்றும் தண்டுவட நரம்புகள் என இருபகுதிகளை உடையது.<br>**மூளை / கபால நரம்புகள்:**<br>➢ 12 இணை கபால நரம்புகள் உள்ளன.<br>➢ சில நரம்புகள் உணர் நரம்புகளாக, உணர் உறுப்புகளிலிருந்து | 1<br>2<br>2 |

| | | |
|---|---|---|
| | நரம்புத்தூண்டல்களை மூளைக்கு எடுத்துச்செல்கின்றன.<br>➢ எ.கா: பார்வை நரம்புகள்<br>➢ சில கபால நரம்புகள் இயக்கு நரம்புகளாக செயலாற்றி மூளையிலிருந்து செயலாற்றும் உறுப்புக்களுக்கு நரம்புத்தூண்டல்களை எடுத்துச் செல்கின்றன.<br>➢ எ.கா: கண்ணிற்கு வரும் இயக்க நரம்பு<br>➢ சிலவகை கபால நரம்புகள் உணர்ச்சி மற்றும் இயக்கம் ஆகிய இரண்டையும் கடத்துவதால் இவை கலப்பு நரம்புகள் எனப்படுகின்றன.<br>➢ எ.கா: முக நரம்புகள், வேகஸ் நரம்புகள்.<br>**தண்டுவட நரம்புகள்:**<br>➢ இவை தண்டுவடத்திலிருந்து உருவாகின்றன.<br>➢ 31 இணை தண்டுவட நரம்புகள் உள்ளன.<br>➢ இவை உணர்ச்சி மற்றும் இயக்கம் ஆகிய இரண்டையும் கடத்துவதால் அனைத்து தண்டுவட நரம்புளும் கலப்பு நரம்புகள் ஆகும். | |
| | **பகுதி - II** | |
| 50 | **இருவித்திலை விதையின் அமைப்பு (அவரை):**<br>➢ அவரை விதையானது தடித்த, சிறுநீரக வடிவம் கொண்டு, மெலிதாக ஒரு புறம் வளைந்து காணப்படும்.<br>➢ இந்தப் பகுதியில், நீள் வட்டத்தில் அமைந்த வெண்மையான சற்று தடித்த ரஃபே என்ற அமைப்பு உள்ளது.<br>➢ இந்த ரஃபேயின் ஒரு நுனியில் சிறிய துளை உள்ளது.<br>➢ இதற்கு வளர்துளை அல்லது மைக்ரோபைல் என்று பெயர்.<br>➢ நீரில் ஊற வைக்கப்பட்ட விதையை மெதுவாக அழுத்தும்போது, நீர்த்துளியும், காற்றுக் குமிழ்களும் இந்த வளர்துளையின் வழியாக வெளிவருகின்றன.<br>➢ கரு, விதையுறையால் சூழப்பட்டுள்ளது.<br>➢ கருவில் ஒரு மைய அச்சு உள்ளது.<br>➢ இதனுடன் சதைப்பற்றுள்ள இருவிதையிலைகள் இணைந்துள்ளன.<br>➢ மைய அச்சின் ஒரு முனையில் முளைவேரும் மற்றொரு முனையில் முளைக்குருத்தும் உள்ளன.<br>➢ முளைவேரின் நுனியானது, வளர்துளையின் அருகில் அமைந்துள்ளது.<br>➢ முளைக் குருத்தானது, இருவித்திலைகளுக்கு இடையில் உள்ளது.<br>➢ முளைக்குருத்தில் சிறிய குட்டையான மையத் தண்டும், மிகச் சிறிய மொட்டும், குவிந்த இரண்டு சிறிய இலைகளும் உள்ளன.<br> | 3<br>2 |
| 51 | **குளச்சூழ்நிலை மண்டலம்:**<br>➢ நிலையான சலனமற்ற நன்னீர் குளம் ஒரு குளச்சூழ்நிலை மண்டலம் ஆகும். | 1<br>4 |

| | | |
|---|---|---|
| | **சூழ்நிலை மண்டலத்தின் அமைப்புக் கூறுகள்:**<br>**உயிரற்ற காரணிகள்:**<br>➢ சூரிய ஒளி, வெப்பநிலை, ஹைட்ரஜன் அயனிச் செறிவு, கார்பன் டை ஆக்ஸைடு, ஆக்ஸிஜன், கந்தகம் போன்ற கனிமப் பொருள்கள், கார்போஹைட்ரேட், புரதம் மற்றும் லிப்பிட் போன்ற கரிமப் பொருள்களும் உயிரற்ற காரணிகளாகும்.<br>**உயிருள்ள காரணிகள்:**<br>➢ தயாரிப்பாளர்: தாவர மிதவைளான கிளாமிடாமோனாஸ், ஹைட்ரில்லா, வாலிஸ் நீரியா போன்றவை.<br>**முதல்நிலை நுகர்வோர்:**<br>➢ தாவர மிதவைகளை உண்ணக்கூடிய சிறு பூச்சிகள், தட்டான் மற்றும் இளம் உயிரிகள்.<br>**இரண்டாம் நிலை நுகர்வோர்:**<br>➢ சிறு மீன்கள், தவளை மற்றும் சிறு பூச்சிகள் போன்ற தாவர மிதவைகளை உண்ணக்கூடிய உயிரிகள்.<br>**மூன்றாம் நிலை நுகர்வோர்:**<br>➢ இரண்டாம் நிலை நுகர்வோரை உண்ணக்கூடிய பெரிய மீன்கள், மீன்கொத்தி போன்ற உயிரினங்கள்.<br>**சிதைப்பவை:**<br>➢ தாவர மற்றும் விலங்கு உடல்களை சிதைக்கும் பாக்டீரியா போன்றவை சிதைப்பவை ஆகும். | |
| | **பகுதி - III** | |
| 52 | அ) ை) 4 மோல்கள் ைை) 19 மோல்கள்<br>ஆ) 1 மோல் நைட்ரோ கிளிசரினிலிருந்து கிடைப்பவை = 19/4 = 4 .75<br>இ) $C_3H_5(NO_3)_3$ = C X 3 = 12 X 3 = 36<br>H X 5 = 1 X 5 = 5<br>N X 3 = 14 X 3 = 42<br>O X 9 = 16 X 9 = 144<br>----------------<br>227<br>----------------<br>1 மோல் நைட்ரோகிளிசரின் நிறை. = 227 கிராம் | 2<br>1<br>2 |
| 53 | அ) அல்கைன்கள்: கார்பனுக்கும் கார்பனுக்கும் முப்பிணைப்பு கொண்ட கரிமச்சேர்மங்கள் அல்கைன்கள் எனப்படும்.<br>எ.கா: ஈத்தைன்( $C_2H_2$), புரோப்பைன் ($C_3H_4$)<br>ஆ) மூலக்கூறு நிறை 54 கொண்ட அல்கைன்<br>டை மெத்தில் அசிட்டிலீன்<br>IUPAC பெயர்- 2-பியூட்டைன்<br>மூலக்கூறு வாய்ப்பாடு: $C_4H_6$ | 1<br>1<br>1<br>1<br>1 |
| | **பிரிவு - IV** | |
| 54 | இரு பொருள்களுக்கு இடையேயான விசை $F=m^1m^2/d^2$<br>i) A –ன் நிறை இரட்டிப்பாகும்போது விசை இருமடங்காகும். | 5 |

| | | |
|---|---|---|
| | $F = M_1 X M_2$<br>எ.கா: $4 = 2X2$<br>$2^2 X2 = 8$<br>ii) A மற்றும் B-க்கு இடையே உள்ள தொலைவு இரட்டிப்பாகும்போது விசை பாதியாகக் குறையும்.<br>$F = 1/d^2$<br>iii) A மற்றும் B இரண்டின் நிறையும் இரட்டிப்பாகும்போது விசை நான்கு மடங்காகும்.<br>எ.கா: $4 = 2X2$<br>$2^2 X2^2 = 16$ | |
| 55 | **அ) குறியீட்டு மரபுகள்:**<br>➢ பொருள் எப்போதும் ஆடியின் இடப்பக்கம் வைக்கப்படவேண்டும்.<br>➢ முதன்மை அச்சுக்கு இணையாக உள்ள அனைத்து அளவுகளும் ஒளிமையத்திலிருந்து அளக்கப்படவேண்டும்.<br>➢ X அச்சின் திசையில் அளக்கப்படும் அளவுகள் நேர்க்குறி உடையவை.<br>➢ X அச்சிற்கு எதிர்திசையில் அளக்கப்படும் அளவுகள் எதிர்குறி உடையவை.<br>➢ முதன்மை அச்சிற்குக் குத்தாக மேல்நோக்கி அளக்கப்படும் அளவுகள் நேர்குறி உடையவை.<br>➢ முதன்மை அச்சிற்குக் குத்தாக கீழ்நோக்கி அளக்கப்படும் அளவுகள் எதிர்குறி உடையவை.<br>**ஆ) குவியாடிகள்- வாகன பின்புலக் காட்சி ஆடியாக:**<br>➢ பொருளின் நேரான பிம்பத்தை உருவாக்கும்.<br>➢ பொருளின் முழு உருவத்தையும் காட்டும்.<br>➢ பார்வைப்புலம் பெருமமாக உள்ளது. | 3<br>2 |